**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.297/2024 |
| Deposition of witness for Prosecution | : | P.W-3 |
| Name | : | காந்தி, வயது 44 |
| Father Name/Husband Name | : | சந்திரசேகர் |
| Village | : | வானரமுட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | பெயிண்டர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of March 2025.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வானரமுட்டியில் வசித்து பெயிண்டராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில்) உள்ள முதல் கையொப்பங்கள் என்னுடையது தான். அதனை நான் கடந்த 09.07.2024 ஆம் தேதி காலை 08.45 மணியளவில் சிவன் கோவில் முன்பாக ஆஜர் எதிரியை போலிசார் விசாரித்தார்கள்.
2. போலிசார் எதிரியை விசாரித்த போது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாக பதிவு செய்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் முதலாவராக கையொப்பம் செய்தேன். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
3. பின்னர் எதிரி பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.500/- ஐ போலிசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். **அந்த அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. வழக்கு சம்பவம் நடந்தது 08.07.2024 ஆம் தேதி என்ற விவரம் உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். புகார் கொடுத்த அ.சா.1 ஐ உங்களுக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 20 வருடங்களாக தெரியும். அ.சா.1 உடன் நீங்களும், மாரிமுத்துவும் காவல்நிலையம் சென்றீர்கள் என்றால் இல்லை.
2. நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் உள்ள விவரங்களை யார் எழுதினார்கள் என்றால் தெரியாது. போலிசார் எழுதி கொண்டு வந்த பேப்பரில் தான் நீங்கள் கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் கையொப்பம் செய்த பின்னர் வழக்கு சம்பந்தமாக உங்களுக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.
3. சிவன்கோவிலில் உங்களை விசாரித்த பின்னர் உங்களை வழக்கு சம்பந்தமாக போலிசார் உங்களை தனிப்பட்ட முறையில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 உங்களுக்கு 20 வருடமாக உங்கள் உடன் தொழில் செய்து வருவதால் அவர் தகவல் சொல்லி தான் தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளீர்கள் என்றால் ஆம்.
4. அ.சா.1 உடன் காவல்நிலையத்திற்கு சென்று அங்கு வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக சொல்கிறீர்கள் என்றால் ஆம் நான் காவல்நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.